IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 43/2009

| | |
|---|---|
| Deposition of Witness | : PW 1 |
| Name | : ஜோதிரத்தினம்மாள் (வயது –73 ) |
| Father's Name /W/o | : க/பெ எத்திராஜ் |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : மேல்பாக்கம் |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 02.07.2025.

**9 ஆவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள விபரம் யார் சொன்னது என்றால் நான் சொன்னேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்நீதிமன்றத்தில் எதற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு என் சொத்து வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்தேன். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் எந்த விலாசம் தெரிவித்துள்ளேன் என்றால் மேல்பாக்கம். இன்றைய தேதிவரை அந்த கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் ஆம்.

2. தாவா சொத்து நான் வசித்து வரும் இடத்திற்கு பக்கத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் மேல்பாக்கம் கிராமத்தில் பிறந்து வளர்ந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து என் தந்தை குப்பைய தேவர் அவர்களுக்கு சொந்தமா என்றால் சரிதான்.

3. என் தந்தை பெயரில் சொத்து உள்ளதற்கான ஆவணம் இ,ந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் நான் தாக்கல் செய்தேன் என்றால் என் தந்தை பெயரில் பத்திரம் மற்றும் பட்டா இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னென்ன ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சொத்து சம்பந்தமாக சோளிங்கர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

4. 24.06.1981 ஆம் தேதியிட்ட முதல் நிலை தீர்ப்பாணை மற்றும் 02.08.1982 தேதியிட்ட இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பித்த நிலை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு எண்.103/1995 இல் நான் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். என் தந்தையின் இரண்டாவது மனைவி சரசம்மாள் தாவா சொத்தை சுவாதீனம் எடுத்து 13.12.1989 ஆம் ஆண்டு அருணாச்சலம் என்பவரின் பெயரில் உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. அருணாச்சலம் மேற்படி உயிலின் அடிப்டையில் முணிரத்தினத்திற்கு கிரையம் எழுதி வைத்தார் என்றாலும் இன்றைய தேதிவரை அவர்தான் இன்று வரை உயிலில் குறிப்பிட்டுள்ள அனுபவத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல. என் அனுபவத்தில் தான் உள்ளது. 1992 இல் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து முணிரத்தினம் தாவா சொத்தில் (2 ஐட்டம்) வசித்து வருவது எனக்கும் என் கணவருக்கும் தெரியும் என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6 . தாவா சொத்தில் என் தாயார் முனியம்மாள் 38 செண்ட் விற்பனை செய்ய முயற்சி செய்த போது தான் தெரியவந்தது என்றாலும் நான் பொய் சாட்சியம் என்றாலும் சரியல்ல. நானும் 9 ஆவது பிரதிவாதி முணிரத்தினமும் ஒரே ஊரில் வசித்து வருகிறோமா என்றால் சரிதான். என் தந்தையும்

இரண்டாவது மனைவி சரசம்மாளுக்கும் நீதிமன்றம் மூலம் ஒதுக்கப்பட்ட புல எண்.136/2 இல் 39 செண்ட் 3எச்.பி மின் மோட்டார் பம்ப் செண்டில் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரியுள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

7. மேற்படி சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றாலும் நான் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் புல எண்.131/3 இல் 19 செண்ட் புல எண்.136/5 இல் 12 செண்ட் புல எண்.136/2A இல் 17 செண்ட் 9 ஆவது பிரதிவாதி முணிரத்தினம் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. என் தாயார் முனியம்மாள் தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி 756/1992 மனு நிலுவையில் இருந்து வருவதாக நான் என் பத்தி 6 இல் பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல.